TNPSCJOB



Kalviseithi

# செலக்சன்


## 6 சமூக அறிவியல்

## முதல் பருவம்

5/1

### அலகு 1. வரலாறு என்றால் என்ன ?

மனவரைபடம்




### பயிற்சிகள்

**I. சரியான விடையைக் கண்டுபிடி**

**1. பழங்கால மனிதன் தனது உணவைச் சேகரிக்க மேற்கொண்ட நடவடிக்கை.**

அ) வணிகம் ஆ) வேட்டையாடுதல்

இ) ஓவியம் வரைதல் ஈ) விலங்குகளை வளர்த்தல்

**விடை : ஆ) வேட்டையாடுதல்**

**II. கூற்றையும் காரணத்தையும் பொருத்துக. சரியான விடையைக் குறியிட்டுக் காட்டு.**

**1. கூற்று :** பழைய கற்கால மனிதர்கள் வேட்டையாடச் செல்லும் போது நாய்களை உடன் அழைத்துச் சென்றனர்.

**காரணம் :** குகைகளில் பழைய கற்கால மனிதன் தங்கியிருந்த போது, விலங்குகள் வருவதை நாய்கள் தனது மோப்ப சக்தியினால் அறிந்து அவனுக்கு உணர்த்தின.

அ) கூற்று சரி, காரணம் தவறு

ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி

இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று தவறு, காரணமும் தவறு

**விடை : ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**2. பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் அகழாய்வுகள் மூலமாகத் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. அப்பொருட்கள் அக்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ளப் பாதுகாக்கப்படுகின்றன. இக்கூற்றுடன் தொடர்புடையது எது ?**

அ) அருங்காட்சியகங்கள் ஆ) புதைபொருள்படிமங்கள்

இ) கற்கருவிகள் ஈ) எலும்புகள்

**விடை : அ) அருங்காட்சியகங்கள்**

---

**3. தவறான இணையைக் கண்டுபிடி.**

அ) பழைய கற்காலம் – கற்கருவிகள்

ஆ) பாறை ஓவியங்கள் – குகைச் சுவர்கள்

இ) செப்புத் தகடுகள் – ஒரு வரலாற்று ஆதாரம்

ஈ) பூனைகள் – முதலில்பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு

**விடை : ஈ) பூனைகள் – முதலில்பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு**

---

**4. மற்ற தொடர்களிலிருந்து வேறுபட்ட ஒன்றைக் கண்டுபிடி.**

அ) பாறைகள் மற்றும் குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

ஆ) வேட்டையாடுதலை குறிப்பதாக ஓவியங்கள் இருந்தன.

இ) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்.

ஈ) பல வண்ணங்களில் ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன.

**விடை : இ) பழங்கால மனிதன் தனது குடும்ப உறுப்பினர்களுக்கு வேட்டையாடுதலை எடுத்துரைப்பதற்காக வரைந்திருக்கலாம்.**

---

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. பழைய கற்கால மனிதன் பெரும்பாலும் வாழ்ந்த இடங்கள் .........
   **விடை : குகைகள்**
2. வரலாற்றின் தந்தை ..................... **விடை :ஹெரோடோடஸ்**
3. பழைய கற்கால மனிதன் பழக்கிய முதல் விலங்கு .................
   **விடை: நாய்**
4. கல்வெட்டுகள் .................... ஆதாரங்கள் ஆகும்.
   **விடை: தொல்பொருள்**
5. அசோகச் சக்கரத்தில் .................. ஆரக்கால்கள் உள்ளன.
   **விடை :24**

---

**IV. சரியா ? தவறா ?**

1. பழைய கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ளன.
   **விடை : சரி**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

2. பழங்கால மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் தொல்லியல் துறையினரால் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகின்றன.

**விடை :சரி**

3. அசோகரது காலத்தில் புத்த சமயம் நாடு முழுவதும் பரவியது

**விடை : சரி**

**V.பொருத்துக:**

| | |
|---|---|
| அ. பாறை ஓவியங்கள் | – செப்பேடுகள் |
| ஆ. எழுதப்பட்டப் பதிவுகள் | – மிகவும் புகழ் பெற்ற அரசர் |
| இ. அசோகர் | – தேவாரம் |
| ஈ. மதச் சார்புள்ள இலக்கியம் | – வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்வதற்கு உதவுகிறது. |

**விடைகள் :**

| | |
|---|---|
| **அ. பாறை ஓவியங்கள்** | **– வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது** |
| **ஆ. எழுதப்பட்டப் பதிவுகள்** | **– செப்பேடுகள்** |
| **இ. அசோகர்** | **– மிகவும் புகழ் பெற்ற அரசர்** |
| **ஈ. மதச்சார்புள்ள இலக்கியம்** | **– தேவாரம்** |

**VI.ஓரிரு வார்த்தைகளில் விடையளிக்கவும்:**

**1. நாட்குறிப்பு எழுதுவதன் பயன்கள் இரண்டைக் கூறு.**

<u>நாட்குறிப்பு எழுதுவதன் பயன்கள் :</u>

1) நாட்குறிப்பு எழுதியவர்கள் வாழ்ந்த காலத்தை அறிந்துகொள்ள முடியும்.

2) அந்த ஊரில் அந்தக் காலகட்டத்தில் நடந்த முக்கிய நிகழ்வுகளை அறியலாம்.

**2. வரலாற்றுக்கு முந்தைய கால மக்களின் வாழ்க்கை முறையை நாம் எவ்வாறு அறிந்து கொள்கிறோம் ?**

வரலாற்றுக்கு முந்தைய கால மக்களின் வாழ்க்கை முறையை நாம் தொல்லியல் அடையாளங்களான கற்கருவிகள், புதை படிவங்கள், பாறை ஓவியங்கள் மூலம் அறிந்து கொள்கிறோம்.

**3. கல்வெட்டுகள் ஓர் எழுதப்பட்ட வரலாற்றுச்சான்றா ?**

ஆம், கல்வெட்டுகள் ஓர் எழுதப்பட்ட வரலாற்றுச் சான்று.

**4. வரலாற்று தொடக்க காலம் (Proto History) என்றால் என்ன ?**

வரலாற்று தொடக்க காலம் என்பது வரலாற்றுக்கும், வரலாற்றுக்கு முந்திய காலத்திற்கும் இடைப்பட்ட காலம் ஆகும்.

TNPSCJOB

Kalviseithi



5. ஏதேனும் ஒரு காப்பியத்தின் பெயரை எழுது
தொல்காப்பியம்

---

**VII. பின்வரும் வினாக்களுக்கு விடையளி:**

**1. வரலாறு என்றால் என்ன ?**

வரலாறு என்பது கடந்த கால நிகழ்வுகளின் காலவரிசைப் பதிவு ஆகும்.

---

**2. வரலாற்றுக்கு முந்தைய காலம் பற்றி எழுதுக.**

வரலாற்றுக்கு முந்தைய காலம் என்பது கற்கருவிகளை பயன்படுத்தியதற்கும், எழுதும் முறைகளை கண்டுபிடித்ததற்கும் இடைப்பட்ட காலம் ஆகும்.

---

**3. வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் எவை ?**

**வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள் :**

தொல்லியல் அடையாளங்களான

1) கற்கருவிகள், 2) பாறை ஓவியங்கள்
3) புதை படிவங்கள் 4) அகழாய்வுப் பொருட்கள்

---

**4. வரலாற்றுக்கு முந்தைய காலக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் யாவை ?**

1) பிம்பேட்கா
2) ஹன்சாகி பள்ளத்தாக்கு
3) அத்திரம்பாக்கம்

---

**5. அருங்காட்சியகத்தின் பயன்கள் யாவை ?**

1) பண்டைய காலத்தில் வாழ்ந்த மனிதர்கள் பயன்படுத்திய பொருட்கள் அகழாய்வுகள் மூலம் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன.

2) அவற்றை பாதுகாக்கும் இடமாக அருங்காட்சியகம் பயன்படுகிறது.

3) அதனைப் பார்ப்பதன் மூலம் நம்முடைய முன்னோர்கள் வாழ்ந்த காலத்தையும் அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளையும் நாம் அறிந்து கொள்ளலாம்.

---

**6. பழங்கால மனிதன் வேட்டையாடப் பயன்படுத்திய கருவிகள் சிலவற்றைக் கூறு.**

1) கரடுமுரடான கற்கருவிகள்,
2) வலுவான மரக்கிளைகள்
3) கூர்மையான எலும்புகள்
4) விலங்குகளின் கொம்புகள்.

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB

Kalviseithi



**7. பாறைகளில் ஓவியங்கள் ஏன் வரையப்பட்டன ?**

1. வேட்டைக்குப் போனவர்கள் அங்கு நடந்தது என்ன என்பதை, தங்களோடு வேட்டைக்கு வர இயலாதவர்களுக்குக் காட்டுவதற்காக பாறைகளில் ஓவியங்களை வரைந்தனர்.

2. சில நேரங்களில் பொழுது போக்காக வரைந்தனர்.

---

**8. தொல் கைவினைப் பொருட்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.**

1) பானைகள்
2) பொம்மைகள்

---

**VIII. உயர் சிந்தனை வினாக்கள்.**

**1. வரலாற்றுக்கு முந்தைய காலத்தில் மக்களுக்கு நாய் எவ்வாறு பயனுள்ளதாக இருந்தது.**

★ பழங்கால மனிதர்கள் வாழ்ந்து வந்த குகைகளுக்குள் கொடிய விலங்குகள் நுழைந்து விடும்.

★ ஆனால் நாய்கள் தமது கூரிய மோப்ப உணர்வினால் விலங்குகளின் வருகையை அறிந்து கொண்டு குரைத்தன.

★ இதைக் கண்ட மனிதர்கள், நாய்களைப் பழக்கி தங்கள் பாதுகாப்பிற்காகவும், வேட்டையாடுவதற்காகவும், வேட்டையாடப் போகும் போது உடன் அழைத்துச் செல்லத் தொடங்கினர்.

---

**2. பழைய கற்கால மனிதனின் வாழ்க்கை முறையைத் தற்கால வாழ்க்கை முறையோடு ஒப்பிட்டுப்பார்.**

| கற்கால மனித வாழ்க்கை முறை | தற்கால மனித வாழ்க்கை முறை |
|---|---|
| பாதுகாப்பற்ற சூழலில் குகைகளுக்குள்வாழ்ந்தார்கள். | பாதுகாப்பான சூழலில் வீடுகளில் வாழ்கிறார்கள். |
| உணவுக்காக நாய்கள் உதவியுடன் வேட்டையாடினார்கள். | உணவுக்காக இயந்திரங்கள் உதவியுடன் விவசாயம் செய்கிறார்கள். |
| விலங்குகளிடமிருந்து தங்களை தற்காத்துக் கொள்ள நாய்கள் மற்றும் கற்கருவிகளை. பயன்படுத்தினார்கள். | நவீன கருவிகளுடன், மிகப் பாதுகாப்பாக வாழ்கிறார்கள். |

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB




Kalviseithi

## IX. மாணவர் செயல்பாடு

**2. ஆதிகால மனிதன் கற்களைக் கருவியாகப் பயன்படுத்தினான். கற்களின் பயன்களைக் காட்டும் படங்களைச் சேகரித்து ஒரு படத்தொகுப்பு தயார் செய்க.**








**3. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று ஆதாரங்கள் எந்த வகையைச் சார்ந்தது.**

அ) ஆதிச்சநல்லூரில் இருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட தாழிகள்
**விடை : தொல்கைத்திறன் பொருட்கள்**

ஆ) வேள்விக்குடி செப்பேடுகள் **விடை : கல்வெட்டு**

இ) மகாபாரதம் **விடை: மதசார்புள்ள இலக்கியம்**

ஈ) சாஞ்சி ஸ்தூபி **விடை : நினைவுச் சின்னம்**

உ) பட்டினப்பாலை **விடை : இலக்கிய ஆதாரம்**


ஊ) கீழடியில் கிடைத்துள்ள மட்பாண்டங்கள்
**விடை : தொல் கைத்திறன் பொருட்கள்**

எ) சிந்து வெளியில் கண்டெடுக்கப்பட்ட பொம்மைகள்
**விடை : தொல் கைத்திறன் பொருட்கள்**

ஏ) தஞ்சை பெரிய கோவில் **விடை : நினைவுச் சின்னம்**

## X. வாழ்க்கைக் கல்வி

**1. களிமண்ணைக் கொண்டு பழைய கற்கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளின் மாதிரிகள் தயார் செய்க.**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**2. தாத்தா, பாட்டி அண்டை வீட்டுக்காரர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் உரையாடி உனது தெரு, கிராமம், நகரம் அல்லது பள்ளி இவற்றில் ஏதேனும் ஒன்றைப் பற்றிய செய்திகளைச் சேகரி. அதன் வரலாற்றை 'நானும் ஒரு வரலாற்று ஆசிரியன்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரையாக எழுதிப்பார்.**

**'நானும் ஒரு வரலாற்று ஆசிரியன்'**

**முன்னுரை :**

ராமு என்ற ஆறாம் வகுப்பு மாணவனாகிய நான் சக்கிமங்கலம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியில் படித்து வருகிறேன். என் பள்ளியின் வரலாற்றைப் பற்றி இக் கட்டுரையில் எழுதுகிறேன்.

**பள்ளியின் வரலாறு :**

சக்கிமங்கலம் ஊராட்சி ஒன்றியப் பள்ளியானது ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட ஒரு ஈராசிரியர் பள்ளியாகும். ஒரு தலைமை ஆசிரியர் மற்றும் ஒரு உதவி ஆசிரியையின் துணையோடு அரசால் ஆரம்பிக்கப்பட்டது. படிப்படியாக எங்கள் கிராமத்து மக்கள் ஒன்றிணைந்து பள்ளிக்குத் தேவையான இடவசதி, குடிநீர் இணைப்பு வசதி, மின்வசதி, கழிப்பிட வசதி என சகலவிதமான வசதிகளை நமக்கு நாமே திட்டத்தின் மூலம் செய்து கொடுத்து நவீன பள்ளியாக மாற்றியுள்ளனர்.

இன்றைய காலகட்டத்தில் ஏறக்குறைய 600 மாணவ, மாணவிகள் எம் பள்ளியில் படித்து வருகின்றனர். 20 ஆசிரியர்கள் எம் பள்ளியில் பணியாற்றி வருகின்றனர். கணினி வசதி மூலம் கணினி பாடம் கற்பிக்கப்படுகிறது. உடற்கல்வி, தையற்கலை மற்றும் யோகா பயிற்சிகளும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

இன்றைய சூழலில் நல்ல ஒரு சிறந்த பள்ளியாக எம் பள்ளி உருவாகியிருப்பது எம் கிராம மக்கள் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

**முடிவுரை :**

எம் பள்ளியின் வரலாற்றினை என் தாத்தா, பாட்டி, அண்டைவீட்டார், பள்ளி ஆசிரியை ஆகியோரின் கருத்துக்களால் உருவாக்கியிருப்பதால் நானும் ஒரு வரலாற்று ஆசிரியன் என்பதில் பெருமை கொள்கிறேன்.

TNPSCJOB



Kalviseithi

XI. கட்டக வினாக்கள்.

| | | |
|---|---|---|
| அன்று மனிதர்கள் என் மீது கிறுக்கினார்கள்; வண்ண மை கொண்டு ஓவியம், வரைந்தனர். இன்று என்னை உடைத்து வீடுகள், சாலைகள் அமைக்கின்றனர். நான் யார் ? விடை : **பாறை** | ஏதேனும் இரு தொல்பொருள் ஆதாரங்களைக் கூறு, விடை : **1. நாணயங்கள், 2. கல்வெட்டுகள்** | இலக்கியச் சான்றுகளின் வகைகளைக் கூறு. விடை : **1. மதசார்பற்ற இலக்கியம், 2. மதசார்புள்ள இலக்கியம்** |
| பொ.ஆ.மு – இதன் விரிவாக்கம் என்ன ? விடை : **பொது ஆண்டிற்கு முன்** | 'இஸ்டோரியா' என்னும் கிரேக்கச் சொல்லுக்கு என்ன பொருள் ? விடை : **விசாரிப்பதன் மூலம் கற்றல்** | பொ.ஆ – இதன் விரிவாக்கம் என்ன ? விடை : **பொது ஆண்டு** |
| கல்வெட்டுக் குறிப்புகளைப் பற்றி ஆராயும் துறை **கல்வெட்டியியல்** | நாணங்களை ஆராயும் துறை **நாணயவியல்** | நீங்கள் பேச, பார்க்க, கேட்க, எழுத, படிக்க உதவுவேன். நானின்றி இவ்வுலகம் இல்லை. நான் யார் ? விடை : **கணினி** |

**கூடுதல் வினாக்கள் – விடைகள்**

**I. சரியானவிடையளி :**

1. அசோகர் குறித்த வரலாற்று ஆவணங்களை நூலாக வெளியிட்டவர்............. **விடை : சார்லஸ் ஆலன்**

2. ............. என்ற சொல் கிரேக்கச் சொல்லான இஸ்டோரியா என்பதிலிருந்து பெறப்பட்டது. **விடை : வரலாறு**

3. கல்வெட்டுக்களில் பதிவு செய்யப்பட்ட செய்திகளை ஆராய்வதற்கான துறை............. **விடை : கல்வெட்டியல்**

4. தம்மா என்னும் பிராகிருத சொல்லின் பொருள்............. **விடை : அறநெறி**

TNPSCJOB



Kalviseithi

**விடையளி :**

**1. வரலாற்றைக் கட்டமைக்கவும், மறு சீரமைக்கவும் எவை உதவுகின்றன ?**

கல்வெட்டுக்கள், நினைவுச் சின்னங்கள், செப்புப் பட்டயங்கள், வெளிநாட்டவர் மற்றும் வெளிநாட்டு பயணக் குறிப்புகள், நாட்டுப்புறக் கதைகள்.


**2. நமது தேசியக் கொடியில் உள்ள ஆரக்கால் சக்கரத்தின் இலச்சினை யாது ?**

நமது தேசியக் கொடியில் இடம் பெற்றுள்ள ஆரக்கால் சக்கரம் அசோகர் நிறுவிய சாரநாத் கற்றூணில் உள்ள இலச்சினையாகும்.

**XII. வரைபடம்.**

**இந்திய அரசியல் வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**

டெல்லி, சென்னை, தமிழ்நாடு,
ஆந்திர பிரதேசம், கேரளா, கர்நாடகா





TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

## கற்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்




TNPSCJOB

Kalviseithi



## அலகு 2. மனிதர்களின் பரிணாம வளர்ச்சி

### மனவரைபடம்




### பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

**1. பரிணாமத்தின் வழிமுறை ............**

அ) நேரடியானது ஆ) மறைமுகமானது

இ) படிப்படியானது ஈ) விரைவானது

**விடை : இ) படிப்படியானது**

**2. தான்சானியா ....... கண்டத்தில் உள்ளது.**

அ) ஆசியா ஆ) ஆப்பிரிக்கா

இ) அமெரிக்கா ஈ) ஐரோப்பா

**விடை : ஆ) ஆப்பிரிக்கா**

---

**II. கூற்றுக்கான காரணத்தைப் பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று : உலகின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்த மனிதர்களின் உடலமைப்பிலும் நிறத்திலும் காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன.**

**காரணம் : தட்பவெப்ப நிலை மாற்றமே.**

அ) கூற்று சரி

ஆ) கூற்றுக்குப் பொருத்தமான காரணம் தரப்பட்டுள்ளது.

TNPSCJOB



Kalviseithi

இ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் பொருத்தமான காரணம் அல்ல

ஈ) கூற்றும் காரணமும் தவறானவை

**விடை : ஆ) கூற்றுக்குப் பொருத்தமான காரணம் தரப்பட்டுள்ளது.**

---

**III. சரியான இணையைக் கண்டுபிடி.**

| | |
|---|---|
| அ) ஆஸ்ட்ரலோபிதிகஸ் | – இரு கால்களால் நடப்பது |
| ஆ) ஹோமோஹேபிலிஸ் | – நிமிர்ந்து நின்ற மனிதன் |
| இ) ஹோமோ எரக்டஸ் | – சிந்திக்கும் மனிதன் |
| ஈ) ஹோமோசேப்பியன்ஸ் | – முகத்தின் முன்பக்க நீட்சி குறைந்து காணப்படுவது |

**விடை : அ) ஆஸ்ட்ரலோபிதிகஸ் – இரு கால்களால் நடப்பது**

---

**IV. கோடிட்ட இடங்களை நிரப்பவும்.**

1. தான்சானியாவில் காணப்பட்ட தொடக்க கால மனிதர்களின் காலடித்தடங்களை .................. உலகின் பார்வைக்குக் கொண்டு வந்தார்கள். **விடை :மானுடவியலாளர்கள்**
2. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் நம் முன்னோர்கள் ......... ..... வாழ்க்கை வாழ்ந்தார்கள். **விடை : நாடோடி**
3. பழங்கால மனிதர்களின் முதன்மையான தொழில்கள் ................. மற்றும் ................ ஆகும். **விடை : வேட்டையாடுதல், உணவு சேகரித்தல்**
4. ...................... கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு விவசாயத்தை எளிதாக்கியுள்ளது. **விடை : கலப்பை**
5. பாறை ஓவியங்கள் நீலகிரி மாவட்டத்தில் உள்ள .................... என்னுமிடத்தில் காணப்படுகின்றன. **விடை :கரிக்கையூர்**

---

**V.சரியா ? தவறா ?**

1. நாணயங்களை ஆராய்வதற்கான துறை மானுடவியல் ஆகும் . **விடை : தவறு**
2. ஹோமோ எரக்டஸ் மனிதர்களுக்கு நெருப்பு குறித்த அறிவு இருந்தது. **விடை : சரி**
3. மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு சக்கரம் ஆகும் . **விடை : சரி**
4. மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட முதல் விலங்கு ஆடு. **விடை :தவறு**

---

**VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளி.**

**1. அகழாய்வில் கிடைக்கும் பொருட்களின் காலத்தை அறிய என்ன முறை பயன்படுகிறது ?**

கதிரியக்கக் கார்பன் பகுப்பாய்வு முறை

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**2. தொடக்க கால மனிதர்கள் எதை அணிந்தார்கள் ?**

1) பதப்படுத்தப்பட்ட விலங்குகளின் தோல்கள்
2) மரப்பட்டைகள்
3) மரங்களின் இலைகள்

---

**3. தொடக்க கால மனிதர்கள் எங்கு வாழ்ந்தார்கள் ?**

தொடக்க கால மனிதர்கள் குழுக்களாக மரம், குகை, மலையடிவாரத்தில் வாழ்ந்தார்கள்.

---

**4. நிலத்தை உழுவதற்கு எந்த விலங்கு பயன்படுத்தப்பட்டது ?**

நிலத்தை உழுவதற்கு எருது பயன்படுத்தப்பட்டது.

---

**5. மனிதர்கள் எப்போது ஒரே இடத்தில் குடியேறி வாழ ஆரம்பித்தார்கள் ?**

மனிதர்கள் விவசாயம் செய்ய ஆரம்பித்த போது ஒரே இடத்தில் குடியேறி வாழ ஆரம்பித்தார்கள்.

---

**VII. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.**

**1. பரிணாமம் என்றால் என்ன ?**

மனித இனம் மாறுதல் அடைந்து, ஒரு மேம்பட்ட கட்டத்தை நோக்கி வளர்ச்சி அடைவதே பரிணாமம் ஆகும்.

---

**2. ஹோமோ சேப்பியன்ஸ் மனிதர்களின் இரு பண்புகளை எழுது ?**

1) வேட்டை மற்றும் உணவு சேகரிக்கும் சமூகமாக வாழ்ந்தான்.
2) சுயமாக சிந்தித்தான்.

---

**3. மனிதர்கள் ஏன் இடம் விட்டு இடம் நகர்ந்தார்கள் ?**

மனிதர்கள் ஓரிடத்தில் மண்வளம் குன்றி உணவுப் பொருட்கள் கிடைப்பது நின்றுவிட்டால் உணவுக்காக இடம் விட்டு இடம் நகர்ந்தார்கள்.

---

**4. பழங்கால வேட்டை முறைகளை விளக்கி கூறவும் ?**

1. வலிமையான 10 முதல் 20 பேர் குழுவாக ஒன்று சேர்ந்து கூரிய ஆயுதங்களால் விலங்குகளை வேட்டையாடினார்கள்.
2. குழி தோண்டி அதன் மேல் குச்சிகளை அடுக்கி அதில் இலைகளைப் பரப்பினார்கள். அதில் அறியாமல் தவறி விழும் விலங்குகளை ஆயுதங்களால் கொன்று வேட்டையாடினார்கள்.

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**5. கோடாரிகள் ஏன் உருவாக்கப்பட்டன ?**

**கோடாரிகள் உருவாக்கப்பட்ட காரணங்கள் :**

1. மரம் வெட்ட
2. மரக்கிளைகளை நீக்க
3. குழிதோண்ட
4. விலங்குகளை வேட்டையாட
5. விலங்குகளின் தோலை உரிக்க

---

**6. தொல்லியல் என்பதை எவ்வாறு வரையறுப்பாய் ?**

வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்களையும் அவர்கள் பயன்படுத்திய பொருட்களையும் பற்றிப் படிப்பது தொல்லியல் ஆகும்.

---

**7. மானுடவியல் பற்றி நீ அறிந்துள்ளது என்ன ?**

1. மனிதர்கள் மற்றும் அவர்களின் பரிணாம வளர்ச்சியைப் பற்றி படிப்பது மானுடவியல் ஆகும்.

2. மானுடவியல் என்னும் சொல் இரண்டு கிரேக்க வார்த்தைகளிலிருந்து பெறப்பட்டது.

---

**VIII. உயர் சிந்தனை வினாக்கள்**

**1. பழங்காலம் முதல் நவீன காலம் வரை சக்கரம் வகித்து வரும் முக்கியத்துவம் ?**

**சக்கரத்தின் முக்கியத்துவம் :**

**அ) பழங்காலம்**

1. மண்பாண்டங்கள் செய்ய பயன்பட்டன.
2. மாட்டு வண்டி, குதிரை வண்டியில் வண்டிச் சக்கரமாக பயன்பட்டது.

**ஆ) நவீனகாலம்**

1. பேருந்து, கார், இரயில் இயங்கச் சக்கரம் பயன்படுகிறது.
2. இயந்திரத் தொழிற்சாலை இயங்கப் பயன்படுகிறது.
3. நவீன இயந்திரங்களில் நிலத்தை உழுவதற்கு பயன்படுகிறது.
4. கடிகாரம் இயங்கப் பயன்படுகிறது.

---

TNPSCJOB



Kalviseithi

## IX. மாணவர் செயல்பாடு.

**1. வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த மனிதர்களின் படங்கள் அடங்கிய ஒரு படத்தொகுப்பைத் தயார் செய்.**





## X. வாழ்க்கைத் திறன்


**1. களிமண் பானைகள் மற்றும் கருவிகளைச் செய்து பார்.**









**2. விதவிதமான பொம்மை வண்டிகளைச் சேகரி. அவற்றில் செவ்வகம், சதுரம், முக்கோணம் போன்ற சக்கரங்களைப் பொருத்தி வண்டிகள் எப்படி நகர்கின்றன என்று சோதனை செய்து பார்.**



வட்டவடிவ சக்கரம் கொண்ட பொம்மை வேகமாக நகர்கிறது



முக்கோண வடிவ சக்கரம் கொண்ட பொம்மையின்சக்கரம் சுழலாது



சதுர வடிவ சக்கரம் கொண்ட பொம்மையின் சக்கரம் சுழலாது.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

## XI. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| **சக்கரம்** கண்டுபிடிக்கப்பட்ட நிகழ்வு பானை செய்வதை எளிதாக்கியது. | பண்டப்பரிமாற்ற முறை என்பது **வணிகம்** ஆகும். | தொடக்கக் கால மனிதர்கள் வேட்டைக்குப் பயன்படுத்திய ஆயுதங்களில் இரண்டைக் கூறு. விடை : **1. கல்லில் செய்த கருவி 2. எலும்பில் செய்த கருவி** |
| ஆயுதங்கள் செய்வதற்கு ஏற்ற கல் எது ? விடை : **சிக்கி முக்கிக்கல்** | நகரங்களும் பெரு நகரங்களும் **வணிகம்** மற்றும் **வர்த்தகம்** ஆகியவற்றால் தோன்றின. | மனிதர்களின் முதல் அறிவியல் கண்டுபிடிப்பு எது ? விடை : **சக்கரம்** |
| பாறை ஓவியங்களில் உள்ள உருவங்களை அடையாளம் காணவும். விடை : **விலங்குகள், ஆண்கள், பெண்கள்.** | தொடக்க கால மனிதர்களின் முதன்மையான தொழில் எது ? விடை : **வேட்டையாடுதல்** | குகை ஓவியங்கள் மூலம் நாம் என்ன அறிந்து கொள்கிறோம் ? விடை : **நம் முன்னோர்கள் கால வாழ்க்கை முறை** |
| தொடக்க கால மனிதர்கள் எங்கு வாழ்ந்தார்கள் ? விடை : **குகை, மரம், மலையடிவாரம்.** | **கல்வெட்டியல்** தொல்லியல் துறையுடன் தொடர்புடையது. | தொடக்க கால மனிதர்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகளில் இரண்டைக் குறிப்பிடு. விடை : **1. நாய், 2. பசு.** |

TNPSCJOB


Kalviseithi



**XII. வரைபடம்**

**இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.**

1. ஆதிச்சநல்லூர்
2. அத்திரம்பாக்கம்
3. பிம்பேட்கா
4. ஹன்சாகி பள்ளத்தாக்கு
5. லோத்தல்




TNPSCJOB | www.tnpscjob.com


TNPSCJOB



Kalviseithi

# அலகு 3. சிந்துவெளி நாகரிகம்

## மனவரைபடம்




## பயிற்சிகள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு**

**1. சிந்துவெளி மக்கள் எந்த உலோகங்களைப் பற்றி அறிந்திருந்தனர் ?**

அ) செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம்
ஆ) செம்பு, வெள்ளி, இரும்பு, வெண்கலம்
இ) செம்பு, தங்கம், இரும்பு, வெள்ளி
ஈ) செம்பு, வெள்ளி, இரும்பு, தங்கம்

**விடை : அ) செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம்**

**2. சிந்து வெளி நாகரீகம் எக்காலத்தைச் சார்ந்தது.**

அ) பழைய கற்காலம் ஆ) இடைக்கற்காலம்
இ) புதிய கற்காலம் ஈ) உலோக காலம்

**விடை : ஈ) உலோக காலம்**

**3. ஆற்றங்கரைகள் 'நாகரிகத்தொட்டில்கள்' என அழைக்கப்படக் காரணம்.**

அ) மண் மிகவும் வளமானதால்
ஆ) சீரான கால நிலை நிலவுவதால்
இ) போக்குவரத்திற்குப் பயனுள்ளதாக இருப்பதால்

TNPSCJOB



Kalviseithi

ஈ) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்

**விடை : ஈ) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்**

---

**II. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று : ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகம் எனலாம்.**
**காரணம் : திட்டமிடப்பட்ட நகர அமைப்பு, மேம்பட்ட கழிவு நீர் அமைப்பு**

அ) கூற்றும் காரணமும் சரி
ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்றும் காரணமும் தவறு

**விடை : அ) கூற்றும் காரணமும் சரி**

**2. கூற்று : ஹரப்பா நாகரிகம் வெண்கல காலத்தைச் சார்ந்தது.**
**காரணம் : ஹரப்பா மக்களுக்கு இரும்பின் பயன் தெரியாது**

அ) கூற்றும் காரணமும் சரி
ஆ) கூற்று தவறானது, காரணம் சரி
இ) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது
ஈ) கூற்று மற்றும் காரணம் தவறானவை

**விடை : இ) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது**

**3. கூற்று : ஹரப்பா மக்களின் பொறியியல் திறன் குறிப்பிடத்தக்கது.**
**காரணம் : கடலின் அலைகள், ஓதங்கள், நீரோட்டத்தைக் கணித்த பின் கப்பல் கட்டும் தளத்தைக் கட்டியிருப்பது.**

அ) கூற்றும் காரணமும் சரி
ஆ) கூற்று தவறானது, காரணம் சரியானது
இ) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது
ஈ) கூற்று மற்றும் காரணம் தவறானவை

**விடை : அ) கூற்றும் காரணமும் சரி**

**4. கீழே கூறப்பட்டுள்ள மொகஞ்சதாரோவை பற்றிய கூற்றுகளில் எவை சரியானவை ?**

அ) தங்க ஆபரணங்கள் பற்றித் தெரியவில்லை
ஆ) வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன.
இ) கருவிகள் இரும்பினால் செய்யப்பட்டன
ஈ) பெருங்குளம் நீர் கசியாமல் இருப்பதற்காக பல அடுக்குகளால் இயற்கை தார் கொண்டு பூசப்பட்டன.

**விடை : ஆ) வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன.**
**ஈ) பெருங்குளம் நீர் கசியாமல் இருப்பதற்காக பல அடுக்குகளால் இயற்கை தார் கொண்டு பூசப்பட்டன.**

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**5. கீழ்க்காணும் கூற்றை ஆராய்க.**

1. நகரங்கள், தெருக்களின் வடிவமைப்பு மற்றும் செங்கல் அளவுகள் ஆகியவற்றில் சீரான தன்மை.
2. ஒரு விரிவான மற்றும் நன்கு வடிவமைக்கப்பட்ட வடிகால் அமைப்பு.
3. தானியக் களஞ்சியம் ஹரப்பா நகரங்களில் முக்கியமான பகுதியாக விளங்கியது.

**மேலே கூறப்பட்ட கூற்றுகளில் எது / எவை சரியானவை ?**

அ) 1 & 2 ஆ) 1 & 3

இ) 2 & 3 ஈ) அனைத்தும் சரி

**விடை : ஈ) அனைத்தும் சரி**

---

**6. பொருந்தாததை வட்டமிடு**

காளைகள், ஆடுகள், எருதுகள், பன்றிகள், குதிரைகள்.

**விடை : குதிரைகள்**

---

**7.தவறான இணையைத் தேர்ந்தெடு:**

1. ASI – ஜான் மார்ஷல்
2. கோட்டை – தானியக் களஞ்சியம்
3. லோத்தல் – கப்பல் கட்டும் தளம்
4. ஹரப்பா நாகரிகம் – காவிரி ஆறு

**விடை : ஹரப்பா நாகரிகம் – காவிரி ஆறு**

---

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. ....................மிகப் பழமையான நாகரிகம்.

**விடை: மெசபடோமியா நாகரிகம்**

2. இந்தியாவின் தொல்லியல் ஆய்வுத் துறை .............. என்ற நில அளவையார் உதவியுடன் தொடங்கப்பட்டது.

**விடை:அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம்**

3. ................தானியங்கள் சேகரித்து வைக்கப்பயன்பட்டது.

**விடை: தானியக் களஞ்சியம்**

4. மக்கள் குழுக்களாகச் சேர்ந்து ...........தை உருவாக்குகிறார்கள்.

**விடை: சமுதாயத்தை**

---

**IV.சரியா ?தவறா ?**

1. மெஹர்கர் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த ஓர் இடமாகும். **விடை: சரி**
2. இந்தியாவின் தொல்பொருள் ஆய்வியல் துறை தொல்பொருள் ஆராய்ச்சிக்கும், நாட்டின் கலாச்சார நினைவுச் சின்னங்களின் பாதுகாப்பிற்கும் பொறுப்பானது. **விடை: சரி**
3. தானியக் களஞ்சியம் தானியங்களைச் சேகரித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. **விடை : சரி**
4. முதல் எழுத்து வடிவம் சீனர்களால் உருவாக்கப்பட்டது. **விடை:தவறு**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**V. பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| அ) | மொகஞ்சதாரோ | – | மேடான பகுதி |
| ஆ) | வெண்கலம் | – | சிவப்புமணிக்கல் |
| இ) | கோட்டை | – | உலோகக் கலவை |
| ஈ) | கார்னிலியன் | – | இறந்தோர் மேடு |

**விடைகள் :**

| | | | |
|---|---|---|---|
| **அ)** | **மொகஞ்சதாரோ** | **–** | **இறந்தோர் மேடு** |
| **ஆ)** | **வெண்கலம்** | **–** | **உலோகக் கலவை** |
| **இ)** | **கோட்டை** | **–** | **மேடான பகுதி** |
| **ஈ)** | **கார்னிலியன்** | **–** | **சிவப்புமணிக்கல்** |

**VI. ஓரிரு வார்த்தைகளில் விடையளி:**

**1. உலோகங்களின் பயன்களைக் கூறு.**

1. அணிகலன்கள் செய்ய
2. சன்னல் செய்ய
3. வடிவியல் கருவிகள் செய்ய
4. சமையல் பாத்திரம் செய்ய
5. நாணயங்கள் செய்ய உலோகங்கள் பயன்படுகிறது.

**2. நாம் உண்ணும் உணவில் வேக வைத்த உணவு, பச்சையான உணவு என ஒரு பட்டியலை உருவாக்கு.**

**அ) வேக வைத்த உணவு :** இட்லி, சாதம்,இடியாப்பம்.

**ஆ) பச்சை உணவு :** கொய்யாப்பழம், ஆப்பிள், நெல்லிக்காய், வெள்ளரி.

**3. மிருகங்களையும், மரங்களையும் வழிபடும் பழக்கம் நம்மிடையே உள்ளதா ?**

ஆம். பசுக்கள் மற்றும் ஆலமரம் , வேப்ப மரங்களை வழிபடும் பழக்கம் நம்மிடையே உள்ளது.

**4. ஆற்றங்கரைகள் நாகரிகத் தொட்டில்கள். ஏன் ?**

★ நாகரிகங்கள் தோன்றவும், வளரவும் ஆற்றங்கரைகள் முக்கிய பங்கு வகித்தன.

★ எனவே ஆற்றங்கரைகள் நாகரிகத் தொட்டில்கள் என அழைக்கப்பட்டன.

**5. ஒரு பொம்மை நகர்வதாலேயே அதை நவீன கால பொம்மைகள் என்று பொருள் கொள்ள முடியாது. சிந்துவெளி மக்கள் பொம்மைகளில் பேட்டரிக்கு (மின்கலம்) மாற்றாக எதைப் பயன்படுத்தினர் ?**

சிந்துவெளி மக்கள் பொம்மைகளில் மின்கலத்திற்கு மாற்றாக உருளைகள், சக்கரங்கள், உருண்டைகள் ஆகியவற்றை பயன்படுத்தினார்கள்.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**6. நீ ஒரு தொல் பொருள் ஆய்வாளர் எனில் என்ன செய்வாய் ?**

புதிய அகழ்வாராய்ச்சியில் ஈடுபடுவேன்.

---

**7. இந்திய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த இரு பகுதிகளைக் கூறு.**

1. காலிபங்கள், 2. லோத்தல்

---

**8. சிந்து வெளி நாகரிகத்தின் கூறுகளில் உன்னைக் கவர்ந்தது எது ? ஏன் ?**

பெருங்குளம். இன்றைய நவீன நீச்சல் குளத்தின் அடித்தளம் என்பதால் என்னை கவர்ந்தது.

---

**9. தற்காலத்தில் பொருட்களின் நிறையை அளக்க என்ன கருவி பயன்படுத்தப்படுகிறது ?**

சாதாரணத் தராசு, டிஜிட்டல் தராசு

---

**VII.கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி:**

**1. புதைந்த கட்டிடங்களைக் கண்டுபிடிக்க தற்போது எந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது ?**

வான் வழிப் புகைப்படங்கள் மூலம்

---

**2. சிந்து வெளி நாகரிகம் வெண்கல கால நாகரிகம் என ஏன் அழைக்கப்படுகிறது ?**

சிந்துவெளி மக்கள் வெண்கலத்தாலான பொருட்களைப் பயன்படுத்தியதால் சிந்துவெளி நாகரிகம் வெண்கலக் கால நாகரிகம் என அழைக்கப்படுகிறது.

---

**3. சிந்து வெளி நாகரிகம் ஒரு நகர நாகரிகம். காரணம் கூறு.**

<u>சிந்துவெளி நாகரிகம் ஒரு நகர நாகரிகம் அதற்கான காரணங்கள் :</u>

1)சிறப்பான நகரத் திட்டமிடல்

2)சிறப்பான கட்டிடக்கலை வேலைப்பாடு

3)தூய்மைக்கும், பொது சுகாதாரத்திற்கும் கொடுக்கப்பட்ட அதிக முன்னுரிமை

4)தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவீடுகள்

5)விவசாய மற்றும் கைவினைத் தொழில்களுக்கான திடமான அடித்தளம்.

---

**4. கழிவு நீர் வடிகால் அமைப்பின் சிறப்பைக் கூறு.**

<u>கழிவு நீர் வடிகால் அமைப்பின் சிறப்பு :</u>

1) எல்லா நகரங்களிலும் கழிவு நீர் வடிகால்கள் செங்கற்களைக் கொண்டும் கல்தட்டைகளைக் கொண்டும் மூடப்பட்டிருந்தன.

2) வடிகால் கழிவு நீர் தேங்காமல் செல்ல வசதியாக லேசான மென்சரிவைக் கொண்டிருந்தது.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

3) கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்த துளைகள் சாய்வான இடைவெளியில் அமைக்கப்பட்டிருந்தன.

4) வீட்டிலிருந்து கழிவுநீர் பல தெருக்களின் கீழ் அமைக்கப்பட்டிருந்த குழாய்கள் மூலமாக முக்கிய வடிகால்களைச் சென்றடையுமாறு அமைக்கப்பட்டிருந்தது.

5) ஒவ்வொரு வீட்டிலும் இருந்த குழிகள் திடக்கழிவுகளைத் தேக்கி, கழிவுநீரை மட்டும் வெளியேற்றின.

---

**5. பெருங்குளம் பற்றி உனக்கு தெரிந்தவற்றைக் கூறு.**

**<u>பெருங்குளம் :</u>**

1) பெருங்குளமானது அகன்று, செவ்வக வடிவத்தில் அமைந்திருந்த நீர்த்தேக்கம் ஆகும்.

2) இது நகரின் நடுவில் அமைக்கப்பட்டுள்ளது.

3) குளத்தின் சுவர்கள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு இருந்தன.

4) நீர் கசியாமல் இருப்பதற்காக சுவரிலும், தளத்திலும் பல அடுக்குகள் இயற்கைத் தார் கொண்டு பூசப்பட்டிருந்தது.

5) வட, தென்புறத்திலுருந்து குளத்திற்குச் செல்ல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

6) குளத்தின் பக்கவாட்டில் மூன்று புறமும் அறைகள் உள்ளன.

7) அருகில் இருந்த கிணற்றில் இருந்து நீர் இறைக்கப்பட்டு பெருங்குளத்தில் விடப்பட்டது.

8) உபயோகப்படுத்தப்பட்ட நீர் வெளியேற வகை செய்யப்பட்டிருந்தது.

---

**6. சிந்துவெளி மக்கள் வெளிநாட்டினருடன் வணிகத்தில் ஈடுபட்டனர் என்பதை நீ எவ்வாறு அறிந்து கொள்கிறாய் ?**

**<u>சிந்துவெளி மக்கள் வெளிநாட்டினருடன் வணிகத்தில் ஈடுபட்டதற்கான காரணங்கள் :</u>**

**மெசபடோமியா :** சிந்து வெளி முத்திரைகள் தற்கால ஈராக், குவைத் மற்றும் சிரியா ஆகிய பகுதிகளைக் குறிக்கும் பண்டைய மெசபடோமியாவில் உள்ள சுமேர் பகுதிகளில் கிடைத்துள்ளது.

**மெலுக்கா :** சுமேரியாவின் அக்காடிய பேரரசிற்குட்பட்ட அரசன் நாரம் – சின் சிந்து வெளிப் பகுதியிலுள்ள மெலுக்காவில் அணிகலன் வாங்கியதாகக் குறிப்பு எழுதியுள்ளார்.

**சிந்துவெளி :** பாரசீக வளைகுடா மற்றும் மெசபடோமியாவில் கண்டுபிடிக்கப்பட்டதைப் போன்று உருளை வடிவ முத்திரைகள் சிந்து வெளிப்பகுதியிலும் காணப்படுகின்றன.

**லோத்தல் :** தற்கால குஜராத்திலுள்ள லோத்தலில் கப்பல் கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**VIII. உயர் சிந்தனை வினாக்கள்:**

**1. கீழே கொடுக்கப்பட்டுள்ளச் சிந்துவெளியின் சிறப்பம் சங்களைக் கவனித்து தற்காலத்துடன் ஒப்பிடு.**

1) விளக்குக் கம்பங்கள் 2)சுட்ட செங்கற்கள்
3)நிலத்தடி வடிகால் அமைப்பு 4)எடைகள் மற்றும் அளவீடு
5)கப்பல் கட்டும் தளம்

| சிந்து சமவெளி காலம் | தற்காலம் |
|---|---|
| 1. கல்லால் ஆன விளக்கு கம்பங்கள் உயரமான இடத்தில் பயன்படுத்தப் பட்டன | இரும்பால் ஆன மின்விளக்கு கம்பங்கள் உயரமான இடத்தில் அமைக்கப் பட்டுள்ளன. |
| 2. வீடுகள் சுட்ட செங்கற்களாலும், சுண்ணாம்புக் கலவையிலும் கட்டப்பட்டிருந்தன. | வீடுகள் சுட்ட செங்கற் களாலும் சிமெண்ட் கலவையாலும் கட்டப்படுகின்றன. |
| 3. மூடப்பட்ட நிலத்தடி கழிவுநீர் வடிகால் அமைப்பு இருந்தது. | மூடப்பட்ட நிலத்தடி அமைக்கப் சாக்கடை கழிவு நீர் வடிகால் அமைக்கப்படுகிறது. |
| 4. நிறையை அளக்க எடைகள், அளவைகளைப் பயன்படுத் தினர். பொருட்களின் நீளத்தை அளவிட அளவுகள் குறிக்கப்பட்ட குச்சிகளைப் பயன்படுத்தினர். | நிறையை அளவிட எடைகள், அளவைகள் தராசுகளைப் பயன்படுத்து கின்றனர். நீளத்தை அளவிட அளவுகள் குறிக்கப்பட்ட உலோகப் பட்டைகளை பயன்படுத்துகிறார்கள். |
| 5. குஜராத்திலுள்ள லோத்தலில் கப்பல் கட்டும் தளம் அமைந்திருந்தது. | விசாகப்பட்டினம் மற்றும் மும்பையில் கப்பல் கட்டும் தளம் உள்ளது. |

**2. வேளாண்மை சிந்துவெளி மக்களின் தொழில்களுள் ஒன்று – எவ்வாறு நிரூப்பிப்பாய் ? (கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை வைத்து)**

1) தானியக் களஞ்சியத்தின் தள வெடிப்புகளில் கோதுமை, பார்லி, தினைவகைகள், எள் மற்றும் பருப்பு வகைகளின் மிச்சங்கள் சிதறிக் காணப்பட்டன.

2) செங்கற்களால் கட்டப்பட்ட சுவர்களைக் கொண்ட தானியக் களஞ்சியம் ஒன்று ஹரியானா மாநிலத்தில் உள்ள ராகிகர்கியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

TNPSCJOB



Kalviseithi

**3. மட்பாண்டங்களும் அதன் உடைந்த துண்டுகளும் சிந்துவெளி பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து நீ அறிவது ஏன்ன ?**

★ சிந்துவெளிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள மட்பாண்டங்கள் சிவப்பு வண்ணத்தில் இருந்தன. அவை கருப்பு வண்ணத்தில் அழகிய வேலைப்பாடுகளுடன் இருந்தன.

★ அங்கு கிடைத்த உடைந்த பானைத் துண்டுகள் விலங்குகளின் உருவங்களுடனும், வடிவியல் வடிவமைப்புகளுடனும் காணப்பட்டன.

★ எனவே அக்காலத்தில் சிறந்த சிற்பிகளும், கைவினை வல்லுநர்களும் இருந்துள்ளனர் என்பதை அறியலாம்.

---

**4. லோத்தலில் ஒரு கப்பல் கட்டும் தளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நீ அறிவது என்ன ?**

1. தற்கால குஜராத்தில் உள்ள லோத்தலில் கப்பல் கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
2. இது சிந்துவெளி மக்கள் மேற்கொண்ட கடல் வணிகத்தை உறுதிப்படுத்துகிறது.

---

**5. ஹரப்பா நாகரிகத்தின் அழிவுக்கு காரணம் என்ன ?**

**ஹரப்பா நாகரிகத்தின் அழிவுக்கு காரணங்கள் :**

1. ஆற்றின் கரையில் உள்ள அதன் நகரங்களில் அடிக்கடி ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு.
2. சுற்றுச்சூழல் மாற்றம்.
3. படையெடுப்பு.
4. இயற்கைச் சீற்றங்கள்.
5. காலநிலை மாற்றம்.
6. காடுகள் அழிதல்.
7. தொற்று நோய்த் தாக்குதல்.

---

## IX. மாணவர் செயல்பாடு

### 1. குறுக்கெழுத்து போட்டி

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) லோத் | | பா | ப் | ர | (2) ஹ | | | (3) மா | ர் |
| | | த | | (4) கி | ண | று | | பு | | ர் | (6) தா |
| | | ல் | | (5) வெ | ண் | க | ல | ம் | | ஷ | |
| றை | து | த் | க | வ | ய் | ஆ | ள் | ரு | பொ | ல் | (7) தொ |
| | | | | | | | | (8) இ | | | |
| (10) தா | னி | ய | க் | க | ள | ஞ் | சி | ய | ம் | | |

TNPSCJOB

Kalviseithi



**இடமிருந்து வலம்**

(4) ஒவ்வொரு வீட்டிலும் .............. இருந்தது **விடை : கிணறு**

(5) இது ............... கால நாகரீகம். **விடை :வெண்கலம்**

(10) தானியங்களை சேகரித்து வைக்க பயன்பட்டது. **விடை :தானியக் களஞ்சியம்**

**வலமிருந்து இடம்**

(2) மொஹஞ்ச – தாரோவை விட பழமையானது. **விடை :ஹரப்பா**

(6) இது நீர் கசியாமல் இருக்கப் பூசப்பட்டது. **விடை :தார்**

(7) இது தான் தொல்பொருள் ஆய்விற்கு பொறுப்பு வகிக்கிறது. **விடை : தொல்பொருள் ஆய்வகத்துறை**

**மேலிருந்து கீழ்**

(1) கப்பல் கட்டும் தளம் கண்டுபிடிக்கப்பட்ட இடம் **விடை :லோத்தல்**

(3) இந்திய தொல்பொருள் ஆய்வியல் துறையின் இயக்குநராக இருந்தவர். **விடை : மார்ஷல்**

**கீழிருந்து மேல்**

(8) சிந்துவெளி மக்களுக்கு இதன் பயன் தெரியாது

**விடை : இரும்பு**

---

**2. வினாடி வினா :**

1. சிந்துவெளி மக்கள் ஆடை தயாரிக்க எதைப் பயன் படுத்தினர். **விடை : பருத்தி**
2. முதலில் கண்டுபிடிக்கப்பட்ட சிந்துவெளி நாகரிக நகரம் எது ? **விடை : ஹரப்பா**
3. சிந்து வெளி நாகரிகம் எங்கு இருந்தது ? **விடை : இந்தியாவின் வடமேற்குப் பகுதி**
4. எந்த விலங்கு வண்டி இழுக்கப் பயன்பட்டது ? **விடை : எருது**
5. சிந்து வெளி மக்களுக்கு எந்த உலோகம் தெரியாது ? **விடை : இரும்பு**
6. பானை செய்வதற்கு எதைப் பயன்படுத்தினார் ? **விடை : களிமண்**
7. உலகின் நான்கு பழம்பெரும் நாகரிகங்களில் மிகப் பழமையானது எது ? **விடை : மெசபடோமியா நாகரிகம்**

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

## XII. கட்டத்தில் பதிலளி :

| | | |
|---|---|---|
| சார்லஸ் மேசன் எதைப் பார்த்தார் ? விடை : **செங்கல் திட்டுகள்** | சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய பொருட்களுள் தற்போது நாம் எவற்றையெல்லாம் பயன்படுத்துகிறோம் ? (ஏதேனும் மூன்று கூறு) விடை :**செங்கற்கள், பானை, சக்கரம்** | வேறு என்னென்ன பொருட்கள் எல்லாம் கிடைத்துள்ளன ? விடை : **சுழல் அச்சுக்கள், தந்தத்தினாலான அளவு கோல்கள்** |
| சிந்துவெளி மக்களுக்குத் தெரியாத மூன்றைக் கூறு ? விடை : **1. அரண்மனை, 2. வழிபாடு, 3. இரும்பு.** | எந்த உலோகம் சிந்து வெளி மக்களுக்கு தெரியாது ? விடை : **இரும்பு** | உலகின் மிகப் பழமையான நாகரிகம் எது ? விடை : **மெசபடோமியா நாகரிகம்.** |
| முதலில் பழக்கப்படுத்தப்பட்ட விலங்கு நாய். ஏன் ? விடை : **மோப்ப ஆற்றலால் விலங்குகளை துரத்தும்.** | முதன் முதலில் பருத்திச் செடியை வளர்த்தவர்கள் யார் ? விடை : **சிந்துவெளி மக்கள்** | எந்த நிறுவனம் புதைபொருள் ஆராய்ச்சிக்குப் பொறுப்பானது ? விடை : **இந்திய தொல்லியல் துறை** |
| தமிழ்நாட்டில் ஏதேனும் ஆற்றங்கரை நாகரிகம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதா ? விடை : **காவிரி** | சிந்துவெளி நாகரிகம் பரவிய இரண்டு இடங்கள் எவை ? ( இந்தியாவின் எல்லைக்குள் ) விடை : **1. காலிபங்கள், 2. லோத்தல்** | சிந்துவெளி நகரங்கள் குழந்தைகளுக்கான நகரங்கள் என நாம் கூறமுடியுமா ? விடை : **கூறமுடியும். ஏனெனில் பொம்மை வண்டிகள், தலையையும், கால்களையும் அசைக்கக்கூடிய பசுபொம்மைகள், களிமண் பந்துகள், சிறிய பொம்மைகள், சிறிய களிமண் குரங்கு, சுடுமண் பொம்மைகள், கொட்டைகளைக் கொறிக்கும் அணில் பொம்மைகள், மண்ணால் ஆன நாய்கள், நடனமாடும் ஆண்டு பொம்மை போன்றவை கிடைத்துள்ளன.** |

TNPSCJOB

Kalviseithi




**XI. வரைபடம்**

**1. இந்திய எல்லைக்குள் சிந்துவெளி நாகரிகம் காணப்பட்ட ஏதேனும் நான்கு பகுதிகளைக் குறி.**

**2. இந்திய ஆறுகளுக்கான வரைபடத்தில் சிந்துவெளி நாகரிகம் பரவியிருந்த பகுதிகளை வண்ணமிட்டு காட்டு.**

**3. கீழ்க்கண்ட பகுதிகளைக் கொடுக்கப்பட்ட வரைபடத்தில் குறி.**

1. மொஹஞ்சதாரோ, 2. சான்கு தாரோ, 3. ஹரப்பா, 4. மெஹர்கர், 5. லோத்தல்




TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

# அலகு 4. தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள்

## மனவரைபடம்

**தமிழ்நாட்டின் பண்டைய நகரங்கள்**

- **பூம்புகார்** → கோவலன், கண்ணகி → துறைமுக நகரம் → வங்காள விரிகுடா → மயிலாடு துறை → சிலப்பதிகாரம்
- **மதுரை** → தமிழ்ச்சங்கம் → தூங்காநகரம் → வணிக நகரம் → நாளங்காடி, அல்லங்காடி → அர்த்த சாஸ்திரம்
- **காஞ்சி** → கல்வி நகரம் → கோவில் நகரம் → காளிதாசர் → ஏரிகள் மாவட்டம்

## பயிற்சி வினாக்கள்

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. 6500 ஆண்டுகளுக்கும் பழமையான நாகரிகத்தின் நகரம்**

அ) ஈராக் ஆ) சிந்துவெளி

இ) தமிழகம் ஈ) தொண்டைமண்டலம்

**விடை :அ) ஈராக்**

**2. இவற்றுள் எது தமிழக நகரம்**

அ) ஈராக் ஆ) ஹரப்பா

இ) மொகஞ்சதாரோ ஈ) காஞ்சிபுரம்

**விடை : ஈ) காஞ்சிபுரம்**

**3. வங்காள விரிகுடாவுடன் தொடர்பில்லாத நகரம்**

அ) பூம்புகார் ஆ) மதுரை

இ) கொற்கை ஈ) காஞ்சிபுரம்

**விடை :ஈ) காஞ்சிபும்**

**4. தமிழர்களின் நீர் மேலாண்மையை விளக்குவது**

அ) கல்லணை ஆ) காஞ்சிபுர ஏரிகள்

இ) பராக்கிரம பாண்டியன் ஏரி ஈ) காவிரி ஆறு

இவற்றில்

அ) அ மட்டும் சரி, ஆ) ஆ மட்டும் சரி, இ) இ மட்டும் சரி,

ஈ) அ மற்றும் ஆ சரி **விடை : அ மற்றும் ஆ சரி**

**5. பின்வருவனவற்றுள் எது தொன்மையான நகரமல்ல**

அ) மதுரை ஆ) காஞ்சிபுரம் இ) பூம்புகார் ஈ) சென்னை

**விடை :ஈ) சென்னை**

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**6. கீழடி அகழாய்வுகளுடன் தொடர்புடைய நகரம**

அ) மதுரை ஆ) காஞ்சிபுரம் இ) பூம்புகார் ஈ) ஹரப்பா

**விடை : அ) மதுரை**

---

**II. கூற்றுக்கான காரணத்தை ஆராய்ந்து சரியான விடையைத் தேர்ந்தெடு.**

**1. கூற்று : பூம்புகார் நகரத்திலிருந்து அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதியும், இறக்குமதியும் நடைபெற்றது.**

**காரணம் : வங்காளவிரிகுடா கடல் போக்குவரத்திற்கு ஏதுவாக அமைந்ததால் அண்டைய நாடுகளுடன் வணிகம் சிறப்புற்றிருந்தது.**

அ) கூற்று சரி, காரணம் தவறு

ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி

இ) கூற்று தவறு, காரணம் சரி

ஈ) கூற்று தவறு, காரணம் தவறு

**விடை : ஆ) கூற்று சரி, கூற்றுக்கான காரணமும் சரி**

---

**2. அ) திருநாவுக்கரசர் : "கல்வியில் கரையில" எனக் குறிப்பிட்ட நகரம் காஞ்சிபுரம்**

**ஆ) இந்தியாவின் ஏழு புனித தலங்களுள் ஒன்று என யுவான்சுவாங் குறிப்பிட்டது காஞ்சிபுரம்.**

**இ) நகரங்களுள் சிறந்தது காஞ்சிபுரம் என காளிதாசர் குறிப்பிட்டுள்ளார்.**

அ) அ மட்டும் சரி, ஆ) ஆ மட்டும் சரி, இ) இ மட்டும் சரி,

ஈ) அனைத்தும் சரி **விடை : ஈ) அனைத்தும் சரி**

---

**3. சரியான தொடரைக் கண்டறிக.**

அ) நாளங்காடி என்பது இரவு நேரக் கடை

ஆ) அல்லங்காடி என்பது பகல் நேரக்கடை

இ) ரோமானிய நாட்டு நாணயம் தயாரித்த தொழிற்சாலை பூம்புகார்.

ஈ) கொற்கை அருகில் உள்ள உவரியில் இருந்து முத்து ஏற்றுமதி செய்யப்பட்டது.

**விடை : ஈ) கொற்கை அருகில் உள்ள உவரியில் இருந்து முத்து ஏற்றுமதி செய்யப்பட்டது.**

---

**4. தவறான தொடரைக் கண்டறிக.**

அ) மெகஸ்தனிஸ் தன்னுடைய பயணக் குறிப்புகளில் மதுரையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

ஆ) யுவான் சுவாங் தமிழ்நாட்டு நகரமான காஞ்சிபுரத்திற்கு வந்தார்.

இ) கோவலனும், கண்ணகியும் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தனர்.

ஈ) ஈராக் நகரம் பட்டினப்பாலையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**விடை : இ) கோவலனும், கண்ணகியும் காஞ்சிபுரத்தில் வாழ்ந்தனர்.**

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**5. சரியான இணையைக் கண்டறிக.**

அ) கூடல் நகர் – பூம்புகார் ஆ) தூங்கா நகரம் – ஹரப்பா

இ) கல்வி நகரம் – மதுரை ஈ) கோயில் நகரம் – காஞ்சிபுரம்

**விடை : ஈ) கோயில் நகரம் – காஞ்சிபுரம்**

---

**6. தவறான இணையைக் கண்டறிக.**

அ) வட மலை – தங்கம் ஆ) மேற்கு மலை – சந்தனம்

இ) தென்கடல் – முத்து ஈ) கீழ்கடல் – அகில்

**விடை : ஈ) கீழ்கடல் – அகில்**

---

**III. கோடிட்ட இடத்தை நிரப்புக.**

1. கைலாசநாதர் ஆலயத்தைக் கட்டியவர் .............

**விடை : பிற்கால பல்லவ மன்னன் இராஜ சிம்மன்**

2. கோயில்களின் நகரம் என அழைக்கப்படுவது ............

**விடை : காஞ்சிபுரம்**

3. மாசாத்துவன் எனும் பெயர் தரும் பொருள் ...........

**விடை : பெருவணிகன்**

---

**IV. சரியா ? தவறா ?**

1. பூம்புகாரில் நடைபெற்ற அண்டைநாட்டு வணிகத்தின் மூலமாக பண்பாட்டுப் பரிமாற்றம் நடைபெற்றது. **விடை : சரி**

2. மதுரையில் அல்லங்காடியில் பெண்கள் பயமின்றி இரவு நேரங்களில் பொருட்கள் வாங்கிச் சென்றனர். **விடை : சரி**

3. பல்லவர்கள் காலத்தில் எண்ணற்ற குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. **விடை : சரி**

4. போதிதர்மர் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். **விடை : சரி**

---

**V. ஓரிரு வார்த்தைகளில் விடையளி.**

**1. ஏற்றுமதி என்றால் என்ன ?**

ஒவ்வொரு நாடும் தனது தேவைக்குப் போக எஞ்சிய பொருட்களை அண்டை நாடுகளுக்கு விற்பது ஏற்றுமதி எனப்படும்.

---

**2. இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காப்பியம் மற்றும் சங்கப் பாடல் நூலைக் கூறு.**

**அ) காப்பியம் :** சிலப்பதிகாரம்

**ஆ) சங்கப்பாடல் நூல் :** பட்டினப்பாலை

---

**3. தொண்டை நாட்டின் தொன்மையான நகரம் எது ?**

தொண்டை நாட்டின் தொன்மையான நகரம் காஞ்சிபுரம்.

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**4. கிராமத்திற்கும், நகரத்திற்கும் உள்ள ஏதேனும் ஒரு வேறுபாட்டைக் கூறு.**

**கிராமம் :** இயற்கைச் சூழலில் பசுமை நிறைந்த அமைதியான பகுதியாகும்.

**நகரம் :** செயற்கையான சூழலில் பசுமை குறைந்த பரபரப்பான ஒரு பகுதியாகும்.

---

**5. லோத்தல் நகரத்துடன் தொடர்புடைய நாகரிகம் எது ?**

லோத்தல் நகரத்துடன் தொடர்புடைய நகரம் சிந்துசமவெளி நாகரிகம்.

---

**6. உலகின் தொன்மையான நாகரீகம் எது ?**

மெசபடோமியா

---

**VI. கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி.**

**1. இந்தியாவின் பண்டைய நகரங்களைக் குறிப்பிடுக.**

1. ஹரப்பா, 2. மொகஞ்சதாரோ

---

**2. தமிழகத்தின் பண்டைய நகரங்களைக் குறிப்பிடுக.**

1. பூம்புகார், 2. மதுரை, 3. காஞ்சி

---

**3. தமிழக நகரங்கள் பற்றி அறிய உதவும் சான்றுகள் யாவை ?**

**அ) பூம்புகார் :**

1. பட்டினப்பாலை
2. இரட்டை காப்பிய நூல்களான சிலப்பதிகாரம், மணிமேகலை

**ஆ) மதுரை :**

1. மெகஸ்தனிசின் குறிப்புகள்.
2. அர்த்தசாஸ்திர குறிப்புகள்.

**இ) காஞ்சி :**

1. கவிஞர் காளிதாசரின் கூற்று.
2. திருநாவுக்கரசரின் புகழ்ச்சி.
3. யுவான் சுவாங்கின் குறிப்பு.

---

**4. மதுரையை ஆண்ட தமிழ் மன்னர்கள் பற்றி குறிப்பிடுக.**

1. பண்டைய காலத்தில் மதுரையை முறையே பாண்டியர்களும் சோழர்களும், களப்பிரர்களும் ஆட்சி செய்தனர்.

---

**5. மதுரைக்கு வழங்கப்படும் வேறு சில பெயர்களைக் குறிப்பிடுக.**

1. தூங்காநகரம்
2. சங்கம் வளர்த்த நகரம்.
3. வணிக நகரம்.

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

**6. நாளங்காடி, அல்லங்காடி வேறுபடுத்துக.**

★ நாளங்காடி என்பது பகல் பொழுதிலான அங்காடியாகும்.

★ அல்லங்காடி என்பது இரவு நேரத்து அங்காடியாகும்.

---

**7. காஞ்சியில் பிறந்த சான்றோர்கள் யாவர் ?**

1. தர்மபாலர், 2. ஜோதிபாலர், 3. சுமதி, 4. போதிதர்மர்.

---

**8. ஏரிகள் மாவட்டம் எது ? ஏன் அவ்வாறு அழைக்கப்படுகிறது ?**

**அ) ஏரிகள் மாவட்டம் :** காஞ்சிபுரம்

**ஆ)** காஞ்சி நகரைச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான ஏரிகள் வெட்டப்பட்டு நீர் தேக்கி வைக்கப்பட்டதால், காஞ்சிபுரம் ஏரிகள் மாவட்டம் என அழைக்கப்படுகிறது.

---

**VII. உயர் சிந்தனை வினாக்கள்.**

**1. ஈராக் – குறிப்பு தருக.**

1. தற்கால ஈராக் பண்டைய மெசபடோமியாவில் அமைந்த பகுதியாகும்.

2. மெசபடோமியா நாகரிகம் நதிக்கரை நாகரிகம் ஆகும்.

3. இது ஒரு வணிக மையமாகும்.

4. முற்காலத்தில் ஈராக்கிற்கும் தமிழகத்திற்கும் ஏற்றுமதி, இறக்குமதி நடைபெற்றுள்ளன.

---

**2. பூம்புகாரின் வணிகம் பற்றி ஒரு பத்தியளவில் எழுதுக.**

**1. துறைமுகம் :** கடல்வழி வணிகம் அதிகரித்த போது, உருவானது பூம்புகார் துறைமுகம் ஆகும்.

**2. தொடர் வணிகம் :** கிரேக்கம், ரோம் வணிகர்கள் தொடர் வணிகத்தின் காரணமாக பூம்புகார் நகரிலேயே வசித்தனர். ஆகவே இங்கு வெளிநாட்டவர் குடியிருப்புகள் தோன்றின.

**3. பண்பாட்டு பரிமாற்றம் :** பூம்புகார் மக்கள் வெளிநாட்டவர் மொழிகளையும், அயல் நாட்டவர் தமிழ் மொழியையும் கற்றனர். இதனால்மொழி மாற்றமும், சிந்தனைப் பரிமாற்றமும், பண்பாட்டுக் கலப்பும் நிகழ்ந்தன.

**4.சரியான விலை :** பூம்புகார் வணிகர்கள் மிகச் சரியான விலைக்கே பொருள்களை விற்றனர்.

**5. இறக்குமதி :** கடல் வழியாகக் குதிரைகள், தரைவழித் தடங்கள் வழியே கருமிளகு, வட மலையிலிருந்து தங்கம் , மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து சந்தனம், தென்கடல் பகுதியிலிருந்து முத்து, கிழக்குப் பகுதியிலிருந்து பவளம், ஈழத்திலிருந்து உணவுப் பொருள்கள் இறக்குமதியானது.

**6. ஏற்றுமதி :** தங்கம் மெரு கூட்டப்பட்டு அயல்நாட்டுக்கு ஏற்றுமதியானது.

---

**3. காஞ்சியில் பிறந்த சான்றோர்களின் பெயர்களைக் கூறு ?**

தர்மபாலர், ஜோதிபாலர், சுமதி, போதிதர்மர்.

---

TNPSCJOB

Kalviseithi



**4. கோயில்களின் நகரம் – குறிப்பு தருக.**

1. காஞ்சி கோயில்களின் நகரம் என்று அழைக்கப்படுகிறது.
2. இங்கு உள்ள கைலாசநாதர் கோவில் புகழ்பெற்றது.
3. பிற்காலப் பல்லவ மன்னன் ராஜசிம்மன் இக்கற்கோயிலைக் கட்டினார்.
4. பல்லவர்கள் காலத்தில் எண்ணற்ற குடைவரைக் கோயில்கள் கட்டப்பட்டன.
5. புத்தகயா, சாஞ்சி போன்ற ஏழு இந்தியப் புனிதத் தலங்களுள் காஞ்சிபுரம் ஒன்று என சீன வரலாற்றாசிரியர் யுவான் சுவாங் குறிப்பிடுகிறார்.

---

**5. காஞ்சிபுரம் கல்வியில் தலை சிறந்து விளங்கியதென்பதை நிருபி.**

1. கல்வி கற்பதற்கான பள்ளிகள் காஞ்சி நகரில் தான் முதன்முதலில் ஏராளமாக அமைக்கப்பட்டன.
2. சமணர் அமைத்த பள்ளிகளில் சமண மாணவர்களும், புத்த விகாரங்களில் புத்த மாணவர்களும் பயின்றனர்.
3. நாளந்தா பல்கலைக்கழகத்தில் பயின்ற சீன வரலாற்றாசிரியர் யுவான் சுவாங் கூடுதல் படிப்புக்காக காஞ்சியில் இருந்த கடிகைக்கு வந்திருக்கிறார்.
4. நகரங்களில் சிறந்தது காஞ்சி என்று கவிஞர் காளிதாசர் கூறுகிறார்.
5. கல்வியில் கரையிலாத காஞ்சி என்று நாயன்மார்களுள் முதன்மையானவரான திருநாவுக்கரசர் காஞ்சி நகரைப் புகழ்ந்துள்ளார்.

---

**VIII. மாணவர் செயல்பாடுகள்.**

**1. கீழடி அகழாய்வுகள் குறித்த படத்தொகுப்பு ஒன்றைத் தயாரிக்கவும்.**

★ மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருள்கள், உலோகப் பொருள்கள், மான் கொம்புகள், சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், இரத்தினக்கல் வகைகள், பழுப்பு, கறுப்பு, சிவப்பு–கறுப்பு பானைகள், சதுரங்கக் காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், செம்பு, சங்கு வளையல்கள், எலும்பினால் ஆன கூர் முனைகள், தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், நீர் சேகரிக்கும் பெரிய மட்கலன்கள், சிறிய குடுவைகள், உறைக் கிணறுகள், சுடுமண் கூரை ஓடுகள் போன்ற பல்வேறுதொல்லியல் பொருள்கள் கிடைத்துள்ளன.

★ மூன்று வெவ்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த இவற்றுள் தொன்மையானவை சுமார் 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன.

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

★ இதுவரை அகழாய்வு செய்யப்பட்ட பெரும்பாலான இடங்கள், இறப்புத் தொடர்பான தடயங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன.

★ ஆனால் கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப்பகுதியும், செங்கல் கட்டுமானங்களும், இதரப் பொருள்களும் தமிழரின் உயரிய நாகரிகத்தைக் கண்முன் காட்டும் சாட்சிகளாய் அமைந்துள்ளன.

---

**2. பண்டைய தமிழகத்தின் வணிக சிறப்புமிக்க நகரம் பூம்புகார் – கலந்துரையாடு.**

**கோபி :** துறைமுகங்கள் எதனால் உருவானது ?

**லோஜினி :** கடல்வழி வணிகம் அதிகரித்த போது, துறைமுகங்கள் உருவாகின. அத்தகைய துறைமுகங்களில் சிறப்புமிக்க ஒன்றுதான் பூம்புகார் துறைமுகம் ஆகும்.

**பிரபாகர் :** இங்கு வணிகம் செய்ய கிரேக்கம், ரோம் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் வந்த வண்ணம் இருந்துள்ளனர்.

**தீபா :** தொடர் வணிகத்தின் காரணமாக இவர்களில் பலர் பூம்புகார் நகரிலேயே வசித்திருக்கின்றனர்.

**மனோஜ் :** ஆகவே இங்கு வெளிநாட்டவர் குடியிருப்புகளும் தோன்றின. எனவே இங்கு பல்வேறு மொழிகளும் பேசப்பட்டன.

**லதா :** கப்பலில் இருந்து சரக்குகளை இறக்கி வைக்கவும், ஏற்றவும் சில மாதங்கள் ஆகும் என்பதால் அயல்நாட்டு வணிகர்கள் இங்குள்ள மக்களுடன் உரையாடவும் வாய்ப்புகள் உருவாயின.

**கீர்த்திநாதன்:** பூம்புகார் மக்கள் வெளிநாட்டவர் மொழிகளையும் கற்றறிந்தனர். அயல் நாட்டவரும் தமிழ் மொழியைக் கற்றனர்.

**மோகன் :** இதனால் பண்ட மாற்றங்களுடன் மொழி மாற்றமும் ஏற்பட்டது.

**ரமேஷ்:** இதன் விளைவாகச் சிந்தனைப் பரிமாற்றமும் பண்பாட்டுக் கலப்பும் நிகழ்ந்தன.

**குமரன் :** பூம்புகார் நகரத்து வணிகர்கள் நேர்மைக்கும் நாணயத்திற்கும் பெயர் பெற்றவர்களாக விளங்கினார்கள்.

**தமிழ்செல்வி :** மிகச் சரியான விலைக்கே பொருள்களை விற்றனர். கூடுதலான விலைக்கு பொருள்களை விற்பது தவறான செயல் என்று அவர்கள் கருதினர் என்பதை பட்டினப்பாலை கூறுகிறது.

**அம்பிகா :** கடல் வழியாகக் குதிரைகள் கருமிளகு தரைவழித் தடங்கள் வழியே கருமிளகும் வட மலையிலிருந்து தங்கம் , மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து சந்தனம், தென்கடல் பகுதியிலிருந்து முத்து, கிழக்குப் பகுதியிலிருந்து பவளம், ஈழத்திலிருந்து உணவுப் பொருள்களும் இறக்குமதியாயின.

---

TNPSCJOB



Kalviseithi

**3. பல்லவர்கள் காலக் கோயில்கள் பற்றிய புகைப்படங்களை சேகரி.**







**பஞ்சபாண்டவர் ரதம்** **வைகுந்தப் பெருமாள் ஆலயம்** **மாமல்லபுரம் கடற்கரை**

---

**4. தமிழகத்தில் உள்ள புகழ்பெற்ற ஏரிகள் பற்றி ஒரு சிறு நூலினைத் தயாரிக்கவும்.**

**தமிழகத்தில் உள்ள புகழ்பெற்ற ஏரிகள் :** செம்பரபாக்கம் ஏரி, புழல் ஏரி, போரூர் ஏரி, சோழவரம் ஏரி, கோட்டார் ஏரி, மதுராந்தகம் ஏரி

---

**5. தமிழ் நாட்டின் புகழ்பெற்ற நகரங்கள் குறித்து ஒரு சிறு நூலைத் தயாரிக்கவும்.**

**தமிழகத்தில் உள்ள புகழ்பெற்ற நகரங்கள் :** கொற்கை, வஞ்சி, தொண்டி, உறையூர், தகடூர், முசிறி, கருவூர், மாமல்லபுரம், தஞ்சை, காயல்.

---

**6. நூலகத்திற்குச் சென்று உன் மாவட்டத்தில் உள்ள முக்கியமான இடங்களைக் கண்டுபிடி.**

**என் மாவட்டம் மதுரை அதில் உள்ள முக்கியமான இடங்கள் :**

**மதுரை :** இந்துக்களின் புனிதத்தலம் – சுற்றுலா இடம் – மீனாட்சி ஆலயம் – திருமலை நாயக்கர் மஹால் – காந்தி அருங்காட்சியகம் – மாரியம்மன் தெப்பகுளம் – கூடலழகர் கோயில் – சத்குரு சங்கீத சபை.

**அழகர் கோயில் :** மலையடிவாரத்தில் அமைந்துள்ள அழகிய கோயில்.

**பழமுதிர் சோலை :** சுப்ரமணியசுவாமியின் ஆறுபடை வீடுகளில் ஒன்று.

**சாத்தியார் :** அணைகட்டு – சுற்றுலாத்தலம்.

**திருமோகூர் :** வரலாற்று புகழ்பெற்ற இடம்.

**திருவடையூர் :** ஆலயம் மற்றும் எழில் மிகு சுற்று சூழலுடைய இடம்.

**திருவேடகம் :** சிவன் கோவில்

**திருப்பரங்குன்றம் :** சுப்ரமணிய சுவாமியின் ஆறுபடை வீடுகளில் ஒன்று.

---

TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



Kalviseithi

## X. கட்டக வினாக்கள்

| | | |
|---|---|---|
| எந்த நதிக்கரையில் பூம்புகார் அமைந்திருந்தது ? விடை : **காவிரி** | தமிழ்ச்சங்கம் அமைந்திருந்த தொன்மையான நகரம் எது ? விடை : **மதுரை** | சங்க இலக்கியங்களில் ஏதேனும் ஒன்று கூறு. விடை : **சிலப்பதிகாரம்** |
| பாண்டிய நாட்டைப் பற்றி குறிப்புகள் கூறிய கிரேக்க வரலாற்றாசிரியர் யார் ? விடை: **மெகஸ்தனிஸ்** | தமிழ்நாட்டின் தெற்கு மாவட்டங்கள் சங்க காலத்தில் எந்த ஆட்சியின் கீழ் இருந்தன ? விடை : **பாண்டியர்கள்** | நாளந்தா பல்கலைக்கழகத்தில் தங்கிப் படித்த சீன வரலாற்றாசிரியர் யார் ? விடை : **யுவான் சுவாங்** |
| திருநாவுக்கரசர் காஞ்சியை **கல்வியில் கரையில்லா காஞ்சி** என்று குறிப்பிடுகிறார். | சங்க காலத்தில் இருந்து இரவு நேர கடைகளின் பெயர் என்ன ? விடை : **அல்லங்காடி** | பல்லவ மன்னன் இராஜசிம்மனால் காஞ்சியில் கட்டப்பட்ட கோயிலின் பெயர் என்ன ? விடை : **கைலாசநாதர் கோவில்** |
| ஏரிகள் மாவட்டம் என்று அழைக்கப்படுவது எது ? விடை : **காஞ்சிபுரம்** | வணிகம் என்றால் என்ன ? விடை : **பொருட்களை வாங்குவது அல்லது விற்பனை செய்வது வணிகம் எனப்படும்.** | வங்காள விரிகுடா கடற்கரையில் அமைந்துள்ள ஒரு துறைமுகத்தின் பெயரைக் கூறு. விடை: **பூம்புகார்** |

TNPSCJOB


Kalviseithi



**XI. வரைபடம்**

**தென்னிந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிப்பிடு.**

1. சென்னை
2. மதுரை
3. காஞ்சிபுரம்
4. பூம்புகார்
5. அரபிக்கடல்
6. வங்காள விரிகுடா
7. இந்தியப்பெருங்கடல்



TNPSCJOB

Kalviseithi

# செலக்சன்

எங்கள் வெளியீடுகள் :

3 முதல் 10 வகுப்பு வரை

தமிழ்

ஆங்கிலம்

கணக்கு

அறிவியல்(TM & EM)

சமூக அறிவியல்

அன்பு நிலையம்
15, புதுமண்டபம் மதுரை – 625001

TNPSCJOB | www.tnpscjob.com